**<u>கம்பம் நகராட்சி</u>**

**2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் (14.12.2018) ஆம் நாள் வெள்ளி கிழமை பிற்பகல் 04.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக்கூட்டம்

**<u>கூட்டப் பொருட்கள்</u>**

| | |
|---|---|
| **1.** | தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் ரூ. 47.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட நந்தகோபால் சாமி நகர் பூங்கா வளாகத்தில் நுண்உர செயலாக்க மையம் (MCC) அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ள நியில் மேற்படி பணி மேற்கொள்வதை ஆட்சேபித்து நகராட்சிக்கு எதிராக திரு. பி. ராதாகிருஷ்ணன், தலைவர் ஸ்ரீ நந்தகோபால்சமி நகர் குடியிருப்போர் நல சங்கம், கம்பம் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றமதுரை கிளையில் W.P(MD) 19552-2018 – எண்ணில் வழக்கு தொடரப்பட்டு நடைபெற்றுவரும் நிலையில், இந்நகராட்சிக்கு எதிராக திரு. எம். கிருஷ்ணகுமார், த/பெ. முத்துசாமி, 1எ/2/1, நந்தகோபால்சாமி தெரு, கம்பம் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P(MD) 20471/2018-ல் வழக்கு தொடரப்பட்டுள்ளதால் இந்நகராட்சி சார்பாக ஆஜரான உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. கே. ஹேமாகார்த்திகேயன், மதுரை அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ. 10,000/–அய் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு – 1)** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண். 1260/2018/இ1) |
| **2.** | தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் ரூ. 47.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட நந்தகோபால் சாமி நகர் பூங்கா வளாகத்தில் நுண்உர செயலாக்க மையம் (MCC) அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரும் நியில் மேற்படி பணி மேற்கொள்வதை ஆட்சேபித்து திரு. பி. ராதாகிருஷ்ணன், தலைவர் ஸ்ரீ நந்தகோபால்சமி நகர் குடியிருப்போர் நல சங்கம், கம்பம், திரு. சி. தெய்வேந்திரன் மற்றும் திரு. எம். முத்துப்பாண்டி ஆகியோரால் சார்பு நீதிமன்றம் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையத்தில் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடரா வண்ணம் இருக்க கேவியட் மனு எண். 157/2018 மற்றும் கேவியட் மனு எண். 187/2018 ன்படி நகராட்சி வழக்கறிஞர் திரு. ரா. காந்தன் அவர்களால் மேற்படி இரு நீதிமன்றங்களில் கேவியட் மனு தாக்கல் செய்ததற்கான கட்டணம் ரூ. 5,000/– ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு – 1)** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண். 1260/2018/இ1) |
| **3.** | கம்பம் நகராட்சியில் அமைந்துள்ள குடியிருப்புகளுக்கு (குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ள குடியிருப்புகள் போக எஞ்சிய குடியிருப்புகளுக்கு) UIDSSMT திட்டத்தின் சுழல் நிதியின் கீழ் (Under Revolving Fund of UIDSSMT) TUFIDCO நிறுவனத்தில் வட்டியில்லா கடன் பெற்று "வீட்டு குடிநீர் குழாய் இணைப்பிற்கான உட்புற குழாய் இணைப்புப் பணி மேற்கொள்ளுதல்" (Provision of Internal Plumping for House Service Connection) என்ற அடிப்படையில் நகரில் **3000** குழாய் இணைப்புகள் வழங்கும் பணிக்கு திட்ட மதிப்பீடாக **ரூ.162.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| | தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு கழகத்தால் **(TUFIDCO**) ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் மதிப்பீட்டு தொகை **ரூ. 162.00** இலட்சம் முழுவதும் வட்டியில்லா கடனாகவும் அல்லது அரசு மான்யமாக மேற்கொண்டு பணிகளை செய்துகொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். |
| **4.** | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 22866/2018/ப்பி3, நாள். 23.08.2018 உத்திரவின்படி, திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் கம்பம் நகராட்சிக்கு இரண்டாம் நிலை குப்பை சேகரம் செய்ய இலகுரக வாகனம் (Light Commercial Vehicle) 3 எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ. 16.80 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்திட அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி, 06.12.2018 ஆம் தேதி மின்னனு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 06.12.2018–ல் ஒப்பந்தப்புள்ளி திறப்பின் போது வலைதளம் வழியாக (Online) ஒரு ஒப்பந்தப்புள்ளியும், நேரடியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வரப்பெற்றது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற விபரம் |
|---|---|---|
| **1.** | ABT Industries Limited,<br>51-A, Palakkad Main Road,<br>South Ukkadam,<br>Coimbatore – 641 001. | வலைதளம் மற்றும் நேரடியாக வரப்பெற்றது |
| **2.** | Lakshmi Auto Diesel Works,<br>Workshop Corner, Salem Main Road,<br>Metturdam 636 401. | நேரடியாக வரப்பெற்றது |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் 06.12.2017 அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் (TechnicalBid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் மேற்படி பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது அதன் விபரம்.

| | |
|---|---|
| 1) | ABT Industries Limited,<br>51-A, Palakkad Main Road, South Ukkadam,<br>Coimbatore – 641 001. |

தொழில்நுட்ப தகுதி வாய்ந்த மேற்கண்ட ஒப்பந்நதாரரின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 10.12.2018 அன்று ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | ABT Industries Limited,<br>51-A, Palakkad Main Road, South Ukkadam,<br>Coimbatore – 641 001. | மதிப்பீட்டு தொகைக்கு (+)<br>0.01 % குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.01% சதவிகிதம் குறைவாக வழங்கிய ABT Industries Limited, 51-A, Palakkad Main Road, South Ukkadam, Coimbatore – 641 001 ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததாரர் மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள 0.01% சதவிகித விலை விகிதத்தினை குறைக்க இயலாது என 11.12.2018ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.01 சதவீதம் குறைவாக வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியாக இருந்தபோதிலும் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளதாலும், மேற்படி பணி அத்தியாவசிய பணியாக இருப்பதால் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியாக இருப்பினும் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கியுள்ள ABT Industries Limited, 51-A, Palakkad Main Road, South Ukkadam, Coimbatore – 641 001 ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் பரிசீலினைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1260/2018/இ1)

**5.** நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் தலைமையில் 21.02.2018 மற்றும் SBM திட்டம் SHPC கூட்ட நடவடிக்கைகளில் அனுமதியளித்துள்ளதன்படி, இந்நகராட்சியில் சேகரமாகும் குப்பைகளை அந்தந்த இடங்களில் பிரித்து உரம் தயார் செய்திட நுண்உர செயலாக்க மையம் அமைத்திடவும், இதர உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளவும் இந்நகர்மன்ற தீர்மான எண். 1563, நாள். 13.08.2018ன்படி பணிகள் மேற்கொள்ள கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 22866/2018/ப்பி3, நாள். 23.08.2018 உத்திரவின்படியும், சென்னை, நகராட்சி நிர்வாக முதன்மை பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி கடிதம் ந.க.எண்.18281/2016/டிஓ1, நாள்.27.08.2018–ன் படியும், நகராட்சியில் **திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் கம்பம் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Biomining முறையில் அகற்றும் பணி** ரூ.444.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்திட அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி, 06.12.2018 ஆம் தேதி மின்னனு மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 06.12.2018–ல் ஒப்பந்தப்புள்ளி திறப்பின் போது வலைதளம் வழியாக (Online) ஒரு ஒப்பந்தப்புள்ளியும், நேரடியாக (Off line) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் (TechnicalBid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது அதன் விபரம்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திரு டி.தமிழ்ராஜன், ஒப்பந்ததாரர், பாப்பம்மாள் புரம், ஆண்டிப்பட்டி 625512 தேனி மாவட்டம். |
| 2 | திரு ஆர்.பரமானந்தம், 4/84, நடுத் தெரு, பரமதேவன் பட்டி, முத்துலாபுரம் (அ), உத்தமபாளையம், (தா), தேனி மாவட்டம். |

தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்நதாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 10.12.2018 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகித விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. டி.தமிழ்ராஜன், ஒப்பந்ததாரர், பாப்பம்மாள் புரம், ஆண்டிப்பட்டி 625512 தேனி மாவட்டம். | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.98 % அதிகம் |
| 2 | திரு ஆர்.பரமானந்தம், 4/84, நடுத் தெரு, பரமதேவன் பட்டி, முத்துலாபுரம் (அ), உத்தமபாளையம், (தா), தேனி மாவட்டம். | மதிப்பீட்டு தொகைக்கு (+) 11.11 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.98% சதவிகிதம் கூடுதலாக வழங்கிய திரு. டி.தமிழ்ராஜன், ஒப்பந்ததாரர், பாப்பம்மாள் புரம், ஆண்டிப்பட்டி 625512 தேனி மாவட்டம் ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததாரர் மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள 4.98% சதவிகித விலை விகிதத்தினை குறைக்க இயலாது என 08.10.2018ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. இதில் 4.98% சதவிகிதம் கூடுதலில் குறைவாக வழங்கியுள்ள திரு. டி.தமிழ்ராஜன், ஒப்பந்ததாரர், பாப்பம்மாள் புரம், ஆண்டிப்பட்டி 625512 தேனி மாவட்டம். ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் பரிசீலினைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2322/2018/சி–3/இ1)

**6.** தேனி மாவட்டம், கம்பம் நகராட்சி பகுதியில் உள்ள குடிசைப்பகுதிகளில், உதவி பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அவர்களால் 06.12.2018ம் தேதிய நேரடி தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண். 1000/உ.பொ(தி)2018, நாள். 11.12.2018 ன் படி இந்நகராட்சிக்குட்பட்ட குடிசைப்பகுதிகளில் சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குடிசை மாற்று வாரியம் மூலம் மேம்பாட்டு பணிகள் அமைக்க அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கு இடம் தேர்வு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்பேரில் கீழ்கண்டவாறு இடம் தேர்வு செய்து மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | குடிசை பகுதியின் பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1. | கே.கே. பட்டி ரோடு குறுக்கு தெருக்கள் | 4 |
| 2. | கம்பம் மெட்டு காலனி (கிழக்கு ) | 11 |
| 3. | கம்பம் மெட்டு காலனி (மேற்கு) | 11 |
| 4. | எ.எம். சர்ச் தெரு | 16 |
| 5. | பார்க் ரோடு குறுக்கு தெருக்கள் | 27 |

அலுவலகக்குறிப்பு..

1) மன்றம் பதிவு செய்யலாம்.
2) மேம்பாட்டு பணிகள் குடிசைப் பகுதி மேம்பாட்டு திட்டத்தின் மூலம் மேற்கொள்ளவும், அதனை தொடர்ந்து எதிர்கால பராமரிப்பு பணிகள் நகராட்சி மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**7.** இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் ஹைட்ராலிக் ஈப்பு வாகனம்

| | |
|---|---|
| | டி.என். 60 T 7497 வாகனத்திற்கான காப்பீட்டு காலம் 12.12.2018ம் தேதியுடன் முடிவடைவதால் தொடர்ந்து மேலும் ஓராண்டு காலத்திற்கு வாகனத்தை காப்பீடு செய்ய அனுமதியும், அதற்கான தொகை ரூ.18,922/—ஐ ஓரியண்டல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. மன்றம் அனுமதிக்கலாம். |
| 8. | இந்நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் பொருள் பாதுகாப்பு அறைக்கான உரிமத்திற்கான பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி இதுவரைத் தொடர்ந்து 20.02.2018, ே14.03.2018, 27.03.2018, 25.04.2018, 04.05.2018, 13.06.2018, 23.08.2018, 26.09.2018, 11.10.2018 மற்றும் 27.11.2018 ஆகிய தேதிகளில் 10 முறை பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியும் முன்பணம் செலுத்தி யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. இப்பேருந்து நிலையத்தில் வந்த இறங்கும் பயணிகள் அதிகமானோர் அமராவதித் தியேட்டர் அருகில் இறங்கி விடுவதால் பேரூந்து நிலையத்திற்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டதும், பொருள்பாதுகாப்பு அறை அமைந்துள்ள இடமும் பெண்கள் அச்சமின்றி வந்துசெல்ல இயலாத ஒரு பாதையாக இருப்பதாலும், அத்துடன் கடந்தாண்டு போட்டியின் காரணமாக ஏலத்தொகையினை கூடுதலாக கோரி தொகையினை உயர்த்தியதன் விளைவாக இதுவரை ஏலம் போகாமல் உள்ளது. பேருந்து நிலையத்திற்கு பொருள்பாதுகாப்பு அறை அவசியம் என்பதாலும், இந்த இனத்திற்கான வைப்புத்தொகையில் மூன்றாண்டு வைப்பில் வைக்கக்கூடிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ. 10,000/—னை மாற்றம் செய்யலாம். ஏலப்பொறுப்புத் தொகை ரூ. 1,00,000/—னை ரூ. 50,000/—ஆக மாற்றம் செய்திட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)அவசர அவசியம் கருதி மேற்கண்ட திருத்திய ஏலப்பொறுப்புத் தொகையின் அடிப்படையில் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3207/2017/பி2) |
| 9. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 21, குட்டியா தெரு, கதவு எண். 30பி—இல் குடியிருந்து வரும் திரு. மா. வேல்பாண்டியன் த/பெ. மாரிமுத்து என்பவர் தனது கடையின் முன்பு தற்காலிக விளம்பர பதாகைகள் அமைக்கப்படுவதை எதிர்த்து இந்நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து உத்தமபாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். ஓ.எஸ். 68/2018—இல் இந்நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு. ரா. காந்தன் அவர்கள் ஆஜராகி எதிர்வாதுரை தாக்கல் செய்ததற்கான செலவினத்தொகை ரூ. 5,000/— (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1638/2018/எப்1) |
| 10. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 11, கம்பம்மெட்டு ரோடு சர்வே வார்டு A , பிளாக்—22, நகரளவு எண். 10—இல் உள்ள இடத்தினை திருமதி. அ. பொன்னுத்தாய் க/பெ. அய்யாவு என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், அதனை அகற்றக்கோரியும் திரு. சு, ரமேஷ், த/பெ. சுப்பராயலு என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ரிட் மனு W.P.(MD)No. 7516/2017 தாக்கல் செய்ததில் |

| | |
|---|---|
| | நீதிமன்றம் **06.07.2017**–ஆம் தேதிய தீர்ப்பில் மனுதாரரின் கோரிக்கையை பரிசீலனை செய்து நான்கு வார காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிடப்பட்டது. இதனிடையே திருமதி. அ. பொன்னுத்தாய், க/பெ. அய்யாவு என்பவர் இந்நகராட்சி மூலம் ஆக்கிரமிப்பு அகற்ற அறிவிப்பு செய்யப்பட்ட நேர்வில் இந்நகராட்சிக்க எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD)No. 18972/2018 –இல் வழக்க தொடர்ந்த வழக்கில் மனுதாரர் திருமதி. அ. பொன்னுத்தாய், க/பெ. அய்யாவு என்பவரின் கோரிக்கையை **6** வாரத்திற்குள் பரிசீலிக்க உத்தரவிடப்பட்டது. இந்நிலையில் திரு. சு. ரமேஷ், த/பெ. சுப்புராயலு என்பவர் சார்பாக அவரது வாக்கறிஞர் மூலம் நீதிபேரணை W.P.(MD)No. 7516/2017 **–** இன் மீது நடவடிக்கை இல்லையென தெரிவித்து இந்நகராட்சியின் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்க தொடர்வதாக தெரிவித்து நோட்டீஸ் வரப்பெற்றது. மேற்படி நோட்டீஸ்ற்கு பதிலளிக்கும் பொருட்டு இந்நகராட்சி வாக்கறிஞர் திரு. கே. ஹேமகார்த்திகேயன் அவர்களிடம் சட்டக்கருத்துரு பெறப்பட்டது. அதற்கான செலவினத்தொகை ரூ. **10,000/–** (ரூபாய் பத்தாயிரம் மட்டும் ) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **<u>அலுவலகக்குறிப்பு..</u>** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 2185/2018/எப்1)** |
| **11.** | திரு. அஹமது சயித், த/பெ. முஹம்மது ஷரீப் என்பவரின் பிறப்புச்சான்றில் பிறந்த தேதி 20.09.1974 என்பதை 20.07.1974 என்று திருத்தம் செய்ய வேண்டிய திரு. எம்.கே.எம். ஹமீது இப்ரஹீம் என்பவர் ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் டபிள்யூ. பி. (எம்.டி) எண். 15966/2018 எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு தொடர்பாக நகராட்சி சார்பாக திரு. கே. ஹேமகார்த்திகேயன் ஆஜராகி வாதிட்டதற்கு உரிய வழக்கறிஞர் கட்டணம் ரூ. 10,000/– ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **<u>அலுவலகக்குறிப்பு..</u>** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3136/2018/எச்1)** |
| **12.** | கம்பம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் மற்றும் உபவிதிகளின்படி திடக்கழிவுகளை முறையாக மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வீடுவீடாக சேகரிக்கவும், மக்கும் குப்பைகளை விஞ்ஞான முறைப்படி உரம் தயாரிக்கவும், கழிநீர் கால்வாய் சுத்தம் செய்யவும், தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள நிரந்த துப்புரவு பணியாளர் பணியிடங்கள் மற்றும் தனியாரிடம் பெறப்படும் 107 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் போதுமானதாக இல்லாத காரணத்தால் கூடுதலாக 67 அதாவது நிரந்தர துப்புரவு பணியாளர் பணியிடங்களில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு துப்புரவு பணியாளர்களை தனியார் நிறுவனத்திடம் பெற்று துப்புரவு பணிகள் மேற்கொள்ள அனுமதியளித்துள்ள நகர்மன்ற தீர்மான எண். 1617, நாள். 12.10.2018–இன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை மூ.மு. எண். 28369/ஜே3/2018, நாள். 22.11.2018–இல் 67 பணியாளர்களை தனியார் நிறுவனத்திடம் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் விதிகள் 2000–இன்படி பெற்ற பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி |

| | |
|---|---|
| | கோரி நடவடிக்கை தொடரவும் ஓராண்டு காலத்திற்காகும் தோராய செலவினம் ரூ. 103.60 இலட்சத்திற்கும், அவ்வப்போது ஏற்படக்கூடிய காலிபணியிடத்திற்கும் தனியார் மூலம் பணியாளர்கள் அமர்த்தி பணி செய்யவும் அதற்காகும் கூடுதல் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 4468/2018/எச்1) |

**ஒப்பம்/– திரு ந.சங்கரன்,**

**நாள். 14.12. 2018**
**இடம். கம்பம்**

**ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**